# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai

## OS No. 12/2019

Deposition of witness for Plaintiff side **PW** 2

Name and Age : திரு.குருசாமி

Father's/Husband Name :

Village and Taluk :

Caste and Religion :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 18.12.2024

**முதல் விசாரணை**

1. நான் கிளாங்காடு கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து கடையநல்லூர் வட்டாட்சியருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின்படி உரிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வட்டாட்சியர் அவர்கள் எனக்கு அதிகாரம் அளித்து ஆவணங்களை கொடுத்து அனுப்பியுள்ளார். மேற்படி அழைப்பாணையின் படி குறிப்பிடப்பட்ட கிளாங்காடு கிராமம், புஞ்சை புலம் எண்.58/9, 58/10 ஆகியவற்றிற்குரிய அடங்கல், மற்றும் அ பதிவேடு உண்மை நகல், 10(1) கணக்கு நகல் மற்றும் புலப்பட உண்மை நகல் ஆகியவற்றை தாக்கல் செய்கிறேன். (**மேற்படி புலம் எண்.58/9, 58/10 ஆகியவற்றிற்குரிய அடங்கல் உண்மை நகல் நீ.சா.ஆ.1 ஆகவும், அ பதிவேடு உண்மை நகல் நீ.சா.ஆ.2**

**ஆகவும், 10(1) கணக்கு நகல் நீ.சா.ஆ.3 ஆகவும், புலப்படம் உண்மை நகல் நீ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). நீ.சா.ஆ.2 அ பதிவேடு நில உடமை மேம்பாட்டு திட்டம் கீழாக தயார் செய்யப்பட்ட ஆவணம் ஆகும். அ பதிவேடு நிலையானது என்றால் சரிதான். அதற்குப் பின்னர் ஏற்படும் மாறுதல்கள் 10(1) கணக்கில் பதிவு செய்யப்படும் என்றால் ஆமாம். தற்போது மேற்படி 10(1) கணக்கு ஆன்லைனிலேயே தானாக பதிவு செய்யப்படும் வகையில் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அலுவலகத்தில் தனியாக 10(1) கணக்கு பதிவு செய்யப்படுவது இல்லை.

**குறுக்குவிசாரணை**

2. (பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால், குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.)

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

SUNIL RAJA MAHALINGAM
Digitally signed by SUNIL RAJA MAHALINGAM
Date: 2024.12.20 09:33:26 +0530

District Munsif cum Judicial Magistrate,

Shenkottai